பக்கங்கள் 15+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 09 திங்கட்கிழமை 22.04.2024 அதிர்வு 266

ரணில் களமிறங்கும்

## பொதுச் சின்னமாக ‘மொட்டு’ அமையாது!

**ஆசுமாரசிங்க தெரிவிப்பு**

அனைத்து தரப்புகளையும் இணைத்துக்கொண்டே ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் 04 ▶



# பொது வேட்பாளரைக் களமிறக்குவதா?

# தமிழரசின் மத்திய குழு முடிவெடுக்கும்

## யாழில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதால் ஏற்படும் சாதக - பாதகங்கள் தொடர்பில் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு சரியான முடிவை எடுப்போம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் சுமந்திரன் எம்.பி. கலந்துகொண்டபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். 04 ▶

# தியத்தலாவை கார் பந்தய விபத்து: போட்டியாளர்களில் இருவர் கைது!

## உயிரிழந்தவர்களின் விவரமும் வெளியாகியது




(ராமு தனராஜ்)

தியத்தலாவை கார் பந்தயத் திடலில் நேற்று மாலை இடம்பெற்ற போட்டியில் ஏற்பட்ட விபத்து தொடர்பில் இரண்டு போட்டியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04 ▶

# புலிகளின் தங்கத்தைத் தேடி குழி தோண்டியவர்கள் கைது!

## கடற்படைச் சிப்பாய், பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் சிக்கினர்



சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டது எனக் கூறப்படும் பணம் மற்றும் நகைகளை மீட்பதற்காகக் குழி தோண்டிய சந்தேகத்தின் பேரில் கடற்படைச் சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிலாவத்துறை கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வந்தனர் எனக் கூறப்படும் இடத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30 - 38 வயதுக்குட்பட்ட நாவுல, மெனிக்தென மற்றும் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் சாரதி எனவும், மற்றையவர் தொழிலாளி எனவும் பொலிஸ் விசாரணைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.



### ராஜபக்ஷக்கள் தொடர்பான

# சந்திரிகாவின் கருத்துக்கள் குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை!

## மொட்டு எம்.பி. கூறுகின்றார்



"ராஜபக்ஷக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல்களால் எமது கட்சிக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. அக்கட்சியினர்தான் எம்மை நம்பி உள்ளனர். நாம் அவர்களை நம்பி அல்லர்.

சந்திரிகா அம்மையார் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு அறிவிப்புகளையும் விடுத்து வருகின்றார். மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் சாய வைத்து பொது வேட்பாளராக அவரே களமிறக்கினார். ஆனால், இன்று மாறுபட்ட கருத்தை வெளியிடுகின்றார்.

ஆகவே, ராஜபக்ஷக்கள் தொடர்பிலும் அவர் வெளியிடும் கருத்துக்கள் குறித்து அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை." – என்றார்.



# இலவச அரிசி வழங்கும் திட்டத்தில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

நாடு முழுவதிலும் உள்ள 18 மாவட்டங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் அரசின் திட்டத்தில் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லை . அது தேர்தலுக்கான இலக்கு அல்ல.

-இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு நேற்று (21) இடம்பெற்றது. கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

களனி, பியகம, மஹர, கட்டான மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய தேர்தல் தொகுதிகளில் நேற்று இந்த அரிசி விநியோகிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைய நாடளாவிய ரீதியில் 18 மாவட்டங்களில் உள்ள 25 லட்சத்து 11 ஆயிரத்து 840 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி விநியோகம் நேற்று ஆரம்பமானது.

கம்பஹா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் 2,41,623 குடும்பங்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களில் தலா 10 கிலோ அரிசி வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவான பயனாளி குடும்பங்கள் அரிசி மானியம் பெற உரித்துடையவர்கள். அந்த குடும்பங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 83 ஆயிரத்து 13 ஆகும்.



இரத்தினபுரி மாவட்டம் அதிகளவான பயனாளி குடும்பங்களைக் கொண்டுள்ளது. அந்த குடும்பங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 43 ஆயிரத்து 892 ஆகும்.

அனுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, குருநாகல். மன்னார், மாத்தளை, மொனராகலை, முல்லைத்தீவு, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

அரசு மக்களுக்கு எதையாவது விநியோகித்தால் அது தேர்தலுக்கான இலக்கு என்றும், எதிர்க்கட்சிகள் எதையாவது விநியோகித்தால் அது அது சமூக சேவை என்றும் கூறும் எதிர்க்கட்சிகளின் கோட்பாட்டுக்கு மக்கள் ஏமாற வேண்டாம்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி விநியோகிக்கும் இந்தத் திட்டம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு வாக்குகளைப் பெறும் திட்டம் என்று எதிர்க்-கட்சி கூறுகிறது.

இந்த திட்டத்துக்கு எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை. இந்த இலவச அரிசி விநியோகம் வாக்குகளை எதிர்பார்த்து தொடங்கப்பட்டவை அல்ல. மக்களின் துயரங்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. புதுவருடத்தை இலக்காகக் கொண்டு தான் இதைத் திட்டமிட்டோம். ஆனால் அரசிடம் அதிகப்படியான அரிசி இல்லாததால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. அரிசி வருவதற்குத் தாமதமாகிவிட்டது.

அரிசி விநியோகம் செய்வதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமா என சிலர் கேட்கின்றனர். பொருள்களை விநியோகிப்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்ல. மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு சற்று நிவாரணம் அளிக்க வேண்டும். எங்களுக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் சமூக நலப்பணிகளை செய்ய வேண்டாம் என கூறிய நிலையில் தான் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

இன்று எதிர்க்கட்சிகள் இந்த திட்டத்தை தேர்தலுக்கான இலக்கு என்று கொச்சைப்படுத்துகின்றனர். எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றாகப் பகிர்ந்தளித்துக் கொண்டு போகிறார்கள். அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் மக்களுக்கு பொருள்களை விநியோகிக்கின்றனர். அவர்கள் பகிர்ந்தால் அது சமூக சேவை. மக்களுக்கான சேவை. அரசு விநியோகம் செய்தால் அது தேர்தலுக்கான இலக்கு. அவை வித்தியாசமான கோட்பாடுகள். அரசு விநியோகம் செய்வது தவறு. அவர்கள் அவற்றை விநியோகம் செய்வது நல்லது. அரசு விநியோகம் செய்தால் அது தேர்தலுக்கான இலக்கு. எதிர்க்கட்சிகள் விநியோகம் செய்தால் அது சமூக சேவைகள். எதிர்க்கட்சிகளின் மாட்டுக் கோட்பாடுகளை நம்பி ஏமாற வேண்டாம்.- என்று தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் மூன்று வாகனங்கள் மோதி கோர விபத்து! ஒருவர் சாவு!!

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று வவுனியா - பட்டானிச்சூர் அரச பாடசாலையை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

துரைசாமி லலிதராசா என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வான், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மூவர் காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.





மேலும், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தென்னை மரத்தின் அடியில் ஆணின் சடலம் மீட்பு!

ஹோமாகம, பிடிபனவில் உள்ள பசுமைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானப் பகுதியில் தென்னை மரத்தின் அடியில் ஆணின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

நிக்போட வெல்லவாய வீதி, கல்பன் கொலனியைச் சேர்ந்த ரத்நாயக்க லியனகே சமன் குமார என்ற 31 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



இவர் நிர்மாணப் பணியிடத்தில் ஒப்பந்த வேலைகளைச் செய்து வரும் நிறுவனத்தில் கம்பி வெட்டும் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தார்.

முதற்கட்ட விசாரணையில், இறந்தவர் புத்தாண்டு விடுமுறை முடிந்து சில நாட்களுக்கு முன்பு பணி நிமித்தம் வந்தார் என்று தெரியவந்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தியத்தலாவை...

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் போட்டிக் கண்காணிப்பாளர்கள் நால்வர், பார்வையாளர்கள் மூவர் என 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போட்டியைப் பார்வையிட சுமார் ஒரு இலட்சம் பேர் வந்திருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கார் பந்தயப் போட்டி 5 வருடங்களின் பின்னர் இந்த வருடம் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி விபத்தில் உயிரிழந்தவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

முத்துசாமி உதயகுமார் (வயது 55, வெலிமடை), சிவகுமார் தனுஷிகா (வயது 08, வெலிமடை), சமத் நிரோஷன் (வயது 09, சீதுவை), ரசிக அபேநாயக்க (வயது 32, அவிசாவளை), சாந்த உபாலிகமகே (வயது 62, மாத்தறை), அசேன் ஈனடிகல (வயது 20, அக்குரஸ்ஸ), ஜயவர்தன (வயது 60, மாத்தறை) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்துள்ள 23 பேரில் மூவர் தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### பொதுச் சின்னமாக...

எனவும், பொதுச் சின்னமாக மொட்டுச் சின்னம் அமையாது எனவும் ஜனாதிபதியின் ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தைக் கைவிட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுவரும் விமர்சனங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யானை சின்னமே ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம், அதனை நாம் கைவிடவில்லை. யானை சின்னத்தின் கீழ் ஐ.தே.கவின் பயணம் தொடரும். எனினும், ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். அதற்காகப் பொதுச் சின்னமொன்று அவசியம் எனக் கூறப்படுகின்றது. எனினும், அந்தப் பொதுச் சின்னம் மொட்டுக் கட்சியாக அமையாது.

அதேபோல் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்கே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்." - என்றார்.


### பொது வேட்பாளரை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக் கட்சியினுடைய மத்திய குழுவில் கூடித் தீர்மானம் எடுப்போம். எதிர்வரும் 23ஆம் திகதி (நாளை) தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடவுள்ளது.

அதன்போது பொது வேட்பாளர் தொடர்பில் ஆரம்பகட்ட பேச்சு நடைபெறும். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதால் ஏற்படும் சாதக - பாதகங்கள் தொடர்பில் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு சரியான முடிவை எடுப்போம்.

தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிப்போம்." - என்றார்.




# ஸ்ரீசத்ய சாயியின் வாழ்க்கை எமக்கு ஒரு செய்தி...!

யாவரிடம் அன்பு காட்டு! யாவருக்கும் சேவை செய்!! இது பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அன்பு மொழி! மனித சமுதாயத்துக்குத் தன்னலமற்ற சேவையுடன் அன்பை வழங்கும் ஒரே நோக்கத்துடன் அவதரித்தவர் தான் மகான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. அவரது மகாசமாதி தினம் "ஆராதனா மகோற்சவம்" என்ற பெயரில் வழிபடுவதுண்டு.

"ஆராதனா மகோற்சவம்" கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தில் ஏப்ரல் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை "மகா ரூத்ரா" யாகத் துடன்ரூபவ் புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜீத்து எடுத்துவரப்பட்ட பாபாவின் ஐம்பொன் திருவுருவச் சிலைக்கு நவபிஷேகம் போன்ற நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளது.

எங்கும் நிறைந்த இறைவன் ஜோதி வடிவானவர் என்று வேதங்கள் கூறுகின்றன. ஜோதி வடிவானவரைத் திடமான கல்லில் அல்லது ஐம்பொன்னில் வடிப்பது வழக்கம். சாயி நிலையத்தில் வருடாவருடம் ரூத்ரா ஹோமத்தில் ஜோதி வளர்க்கப்பட்டு அந்த ஜோதியை அருகே வைக்கப்பட்ட ஒரு கும்பத்துக்குள் குறிப்பிட்ட தெய்வத்தை எழுந்தருளச் செய்து அந்த கும்பத்தில் இருக்கும் புனித நீரை விம்பமாகிய திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்து தெய்வ ஆற்றலை ஏற்றுவதே ஆராதனா மகோற்சவத்தின் முக்கிய நிகழ்வாகும்.

இப்படியொரு நிகழ்வு சாயி நிலையத்தில் மட்டுமே நடக்கும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா "தனது வாழ்க்கை முறை தனது செய்தியாக" அமையவேண்டும் என்பதை விரும்பினார்.

பகவான் முதன் முதலில் தன்னை அவதாரமாக அறிமுகப்படுத்திய போது போதித்த முதல் செய்தி "மானச பஜரே குரு சரணம்" என்பது. அதாவது முதல்-ில் உலக வாழ்க்கை எனும் சமுத்திரத்தில் நீ இருப்பதைத் தெரிந்து கொள்! அடுத்து அதைக் கடக்க முயற்சி செய்!! அதற்கு அடுத்து ஒரு குருவை தெரிவு செய்!!! என்பதாகும்.

பகவான் மகா சமாதிடைவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன், இறுதி செய்தி ஒன்றை வெளிப்படுத்தினார். அதாவது என்றுமில்லாதபடி தனது இரு கரங்களையும் ஒன்று குவித்து பக்தர்களை நோக்கியபடி வணக்கம் செலுத்தினார்.

அதன் அர்த்தம். "எல்லோருக்குள்ளும் வாசம் செய்யும் இறைவனுக்கு வணக்கம் செய்யுங்கள்" என்பதாகும். அவர் இறுதியாக போதித்த தத்துவம். அவர் எவ்வாறு எல்லோரிலும் தம்மைக் கண்டாரோ அதே போன்று நாம் பார்க்கும் எல்லாவற்றிலும் அவரைக் காண வேண்டும். அதாவது அவர் எவ்வாறு பார்த்த எல்லோர் மீதும் தனக்கு வணக்கத்தை தெரிவித்தாரோ அதே போன்று நாமும் பார்க்கும் எல்லாவற்றிலும் அவருக்கு வணக்கத்தை தெரிவிக்க வேண்டும் என்பதாகும்.

அனைவரையும் நேசிப்பதும் சேவை புரிவதும்தான் சாயி மார்க்கம்.

**எஸ். என். உதயநாயகம்**
**பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா மத்திய நிலையம், கொழும்பு.**



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாலைதீவுத் தேர்தல்

கடந்த ஆண்டு இறுதியில் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் எடுத்து, சீன ஆதரவுப் போக்குக் கொண்ட வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்ட வைத்த மாலைதீவு மக்கள், நேற்று அங்கு ஒரே கட்டமாக நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அதே நிலைப்பாட்டை திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும், சந்தேகத்திற்கு அப்பாலும் மீண்டும் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

கடந்த பத்து ஆண்டுகளாக நீடிக்கும் இந்தியாவின் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் அயலுறவுக் கொள்கை அணுகுமுறைக்கு இந்தத் தேர்தல் முடிவு ஒரு பாரிய சறுக்கல் என்பது தெளிவானது.

கடந்த ஆண்டு இறுதி வரை அதிகாரத்தில் இருந்த இந்திய ஆதரவுப் போக்குக் கொண்ட ஜனாதிபதிக்கு எதிராக 'இந்தியா வெளியேறு!' என்ற கோஷத்தையே பிரதானமாக முன்னிலைப்படுத்தி, களத்தில் இறங்கிய முகமது மொய்ஸ/க்கு மாலைதீவு மக்கள் தெளிவான வெற்றியை அளித்த போதே மாலைதீவு இந்திய நட்புறவுப் பிடியிலிருந்து விலகி வெகுதூரம் பயணிக்கத் தொடங்கிவிட்டது என்பது தெளிவாகியது.

ஆட்சிக்கு வந்த சீன ஆதரவு ஜனாதிபதி முகமது மொய்ஸூ, அதிகாரத்தைக் கைப்பற்றிய உடனேயே தமது இந்திய எதிர்ப்புப் போக்கை வெளிப்படையாகவும், உறுதியாகவும் காட்டத் தொடங்கினார். மாலைதீவு நாட்டில் தீவுகளுக்கு இடையே அரச விமான அம்புலன்ஸ் மருத்துவ சேவைக்கு உதவுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த இந்தியப் படை வீரர்களை நாட்டை விட்டு வெளியேறக் காலக்கெடு விதித்து அறிவிப்பு வெளியிட்டார். சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வோம் என்றெல்லாம் பரபரப்பை ஏற்படுத்தினார்.

மாலைதீவின் புதிய ஆட்சியாளர் இந்திய எதிர்ப்புப் போக்கை வெளிப்படுத்திய சூழலில் மாலைதீவுக்கான இந்திய உல்லாசப் பயணிகளின் வருகை மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

நாட்டின் மிக முக்கிய வருமானம் தரும் துறையாக உல்லாச பயணிகளின் வருகை விடயம் இருக்க, இப்படி திடீரென இந்திய உல்லாச பயணிகளின் வருகையின் வீழ்ச்சி மாலைதீவின் பொருளாதாரத்தையே ஆட்டம் காணச் செய்யும் நிலைமையை நோக்கி நகர்த்தியது.

ஆயினும், மாலைதீவின் புதிய ஆட்சியாளர்கள் தங்களின் இந்திய விரோதப் போக்கை விட்டு ஓர் அங்குலம் கூட விலகத் தயாராக இருக்கவில்லை. விலகவில்லை.

அந்த நிலைப்பாடு அவர்களுக்கு நேற்று நடைபெற்ற பொது தேர்தலிலும் பெரு வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றது.

இந்தத் தேர்தலுக்கு முன்னர் 93 ஆசனங்களை கொண்ட நாடாளுமன்றத்தில் சீன் ஆதரவு ஜனாதிபதி முகமது மொய்ஸூவின் பி.என்.சி. கட்சிக்கும் அதன் கூட்டணிக்கும் ஆக எட்டே எட்டு இடங்களே இருந்தன.

இது முகமது மொய்ஸூ தமது அதிகாரங்களை சுயாதீனமாக - சுதந்திரமாக - பிரயோகித்து அரசியல் செய்ய முடியாத இக்கட்டை அவருக்கு ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவரது நகர்வுகளை அவருக்கு எதிரான கட்சிகள் நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து வந்தன.

இந்தப் பின்புலத்தில்தான் நேற்று நடைபெற்ற முடிந்த பொதுத் தேர்தலில் சீன ஆதரவு போக்கு கொண்ட முகமது மொய்ஸூவின் கட்சி மொத்தம் 93 தொகுதிகளில் 66 இடங்களை வென்று, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் ஈட்டியிருக்கின்றது.

இதனால் சீன ஆதரவு ஜனாதிபதி முகமது மொய்ஸூதமக்குத் தேவையான - விருப்பமான - சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, தம்மிஷ்டப்படி காரியங்களை நகர்த்திச் செயற்பட வாய்ப்பு அவருக்கு உறுதியாகி இருக்கின்றது.

அகண்ட பாரதத்தை பொறுத்தவரை சமுத்திரத்தினால் பிரிக்கப்பட்ட அதன் அயல் தேசங்கள் இரண்டு. ஒன்று - இலங்கை. மற்றது - மாலைதீவு.

மாலைதீவின் முழு அரசியல் அதிகார கட்டமைப்புமே சீன ஆதரவுப் போக்குச் சக்திகளின் கட்டுப்பாட்டில் வந்தமை புதுடெல்லிக்குப் பெரும் பின்னடைவு.

அந்த நிலைமை மற்றைய அயல் தேசமான இலங்கையில் ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காக கொழும்பின் கைகளை தாஜா பண்ணுவதில் இந்தியா மேலும் மேலும் கரிசனையாக இருக்கும்.

இது இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட தமிழருக்கு பாதுகாப்பு, நலன், அதிகார பகிர்வு, கௌரவ வாழ்வு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் கரிசனையை இயல்பாகவே இல்லாமல் செய்துவிடும் என்பதுதான் நமக்கு ஏற்பட்ட பின்னடைவாகும்.




# காஸா மக்களுக்காக 31 லட்சம் ரூபா உதவி கையளித்துள்ள கல்முனை கல்வி வலயம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலயம் காஸா மக்களுக்காக 31 லட்சத்து 28 ஆயிரத்து ஐநூறு ரூபா உதவுத் தொகை கையளித்துள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் காஸா மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைக்காக 31 லட்சத்து 28 ஆயிரத்து ஐநூறு ரூபா சேகரிக்கப்பட்டு இன்று (22) கையளிக்கப்பட்டுள்ளது.



வலயக் கல்விப் பணிப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமிடம் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் அதற்கான காசோலையை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் உட்பட கல்வி வலய உயரதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

வலயக் கல்விப் பணிப்பாளரது வழிகாட்டலுக்கமைய கணக்காளரின் நெறிப்படுத்தலில் வலயக் கல்வி அலுவலக கல்விசார், கல்விசார ஊழியர்கள் மற்றும் அதிபர்களின் நிதிப்பங்களிப்புடன் இந்தத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வருடந்தோறும் இடம்பெறும் இப்தார் நிகழ்வுக்கான செலவீனத்தை மட்டுப்படுத்தியே இந்தத் தொகை திரட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காரைதீவு இளைஞர் சம்மேளன புதிய நிர்வாகத்தினர் தெரிவு



(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு பிரதேச செயலக இளைஞர்கள் சம்மேளன கூட்டம் காரைதீவு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இளைஞர்கள் சம்மேளன புதிய தலைவராக ரஜீந்திரன் டிசாந் தெரிவு செய்யபட்டார். புதிய நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடலூர் மைதானத்தில் போட்டிகள்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மாஞ்சோலை நிஜாமியா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு, கிண்ணியா நகர சமுர்த்தி வங்கி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்திய 2024 ஆம் ஆண்டுக்கான தமிழ் சிங்கள புத்தாண்டு சமுர்த்தி விளையாட்டு போட்டி பைசல் நகர் கடலூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வானது மாஞ்சோலை நிஜாமியா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு தலைவர் மற்றும் கிண்ணியா நகர சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.ஜி.எம். அர்ஷாத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கிண்ணியா பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. முஹ்சீன் மற்றும் கிண்ணியா வங்கி சங்க முகாமையாளர் திருமதி முஸம்மிலா றாபீக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கிண்ணியா நகர சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், வலய உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# பண்பாட்டை மாற்ற நினைத்தால் எமது இனம் அழிவடைந்து போகும்

## சொல்லின்செல்வர் இரா செல்வவடிவேல் தெரிவிப்பு

பண்பாடுகள் நமக்குரியவை. அந்த அடிப்படையை மாற்ற நினைக்காதீர்கள், அவ்வாறு மாற்ற நினைத்தால் எமது இனம் அழிந்துவிடும்.

இவ்வாறு சொல்லின்செல்வர் இரா செல்வவடிவேல் தெரிவித்தார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வில் கலந்து கொண்டு மகாபாரத தொடர் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மாற்றங்கள் உண்மைதான், ஆனால் பண்பாடுகள் நமக்கு உரியவை, அவற்றை மாற்ற நினைத்தால் நமது இனம் அழிந்துவிடும், எமது பண்பாட்டை காப்பாற்ற பெண்களால் தான் முடியும்.

எமது மக்கள் சமயத்தின் ஊடாக பண்பாட்டைக் கட்டிக் காத்து எமது இனத்தைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.- என்றார்.

ஆச்சிரம வாராந்த நிகழ்வில் பஞ்ச புராணம் ஓதப்பட்டதை தொடர்ந்து மகாபாரத தொடர் சொற்பொழிவை ஓய்வு பெற்ற ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை உதயபுரி கிராமத்தில் ரூ. 22 லட்சத்தில் அறநெறி பாடசாலை!

## சந்நிதியான் ஆச்சிரமம் அமைத்து வழங்கியது






திருகோணமலை உதயபுரி கிராமத்தில் 22 லட்சம் ரூபா செலவில் அறநெறி பாடசாலை அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரி முத்துக்குமார சுவாமிகள் அறநெறிப் பாடசாலைககே இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை அறநெறி பள்ளி தலைவர் ஐ.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். சந்நிதியான் ஆச்சிரமத்தால் 22 லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டடத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் சம்பிர்தாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார். நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மங்கள சுடர்களைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினரும், சமூக செயற்பாட்டாளருமான தாயபாரன், சந்நிதியான் ஆச்சிரம பிரதிநிதி கஜானன், செல்வநாயகபுரம் உதயகிரி அருள்மிகு முத்துக்குமார சுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவர் விஜேந்திரன், செயலாளர் ரா.சிவராசம், பொருளாளர் மு. பாக்கியநாதன், உதயபுரி கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் போ.கமலகாசன், உதயபுரி சனசமூக நிலைய தலைவர் ஆர். கே. கோணாமலை, அறநெறி ஆசிரியர் பா.கோகிலவாணி உட்பட பலரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பஞ்சபுராணம் ஓதப்பட்டதுடன், வரவேற்பு நடனம், வரவேற்பு உரை என்பனவும் இடம்பெற்றன.

இதன்போது மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# ஆரையம்பதி கடற்கரையில் இடம்பெற்ற பட்டத்திருவிழா!

## சர்வமத சின்னங்களையிட்டு பட்டம் செய்து பறக்கவிட்ட மாணவன் முதலிடம்




(அஸ்ஹர் இப்ராஹிம்)

மட்டக்களப்பு ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தால் முதல் தடவையாக இந்தப் பட்டத் திருவிழா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

இந்த பட்டத் திருவிழாவில் 30 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றினர்.

இதில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ஆரையம்பதியைச் சேர்ந்த. ரவீந்திரன் சோபிதன் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குரு உமாபத சர்மா, கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை ஈஸ்வரன் உட்பட பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காரைதீவில் இடம்பெற்ற கலாசார விளையாட்டு விழா!









( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41ஆவது வருட நிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சன சமூக நிலையமும் இணைந்து நடத்திய 26 ஆவது மாபெரும் கலாச்சார விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை (20) காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் றொட்டேரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்ற கலாச்சார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து கொண்டார்.


ஏனைய விருந்தினர்களாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், வைத்திய அதிகாரிகளான டாக்டர் பி.சுரேஸ்குமார், டாக்டர் க.ஹறிஷானந்த், போசகர்களான வி.இராஜேந்திரன், விரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் விசேடமாக காரைதீவு விளையாட்டு கழகத்தின் 40 வருட கால வரலாற்றை உள்ளடக்கிய "விபுலவிருட்சம்" என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது . கழகத் தலைவர் விஜயசாந்தன், பிரதம அதிதியிடம் முதல் பிரதியை வழங்கி வைத்தார்.

அத்துடன் 27 கல்வித்துறை சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவறத்தின நூற்றாண்டு விழா!

## நாளை காரைதீவில் இடம்பெறவுள்ளது




( வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டு நாளை (23) 100 ஆண்டுகள் ஆகின்றன.

அதனை முன்னிட்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்தும் நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் நாளை(23) செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமியில் காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் இராம கிருஸ்ண மிஷன் சுவாமி சிவானந்தரிடம் ஞான உபதேசம் பெற்று பண்டிதர் மயில்வாகனன், சுவாமி விபுலானந்தர் ஆனார்.

இந்த நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாசார சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரம நாயக்க இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

முதன்மை அதிதியாக இராம கிருஷ்ண மிஷனின் இலங்கைக்கான தலைவர் ஶ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபே விக்ரம கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், திருகோணமலை மாவட்டம் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி திருமதி ப்ளோரன்ஸ் பாரதி கென்னடி ஆகியோர் கலந்து கொள்வர்.

2024 ஏப்ரல் 24 தொடக்கம் 2025 ஏப்ரல் 24 வரைக்கும் ஒரு வருட காலப் பகுதியை சுவாமி விபுலானந்தர் ஆண்டாக பிரகடனம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஆபத்தான நிலையிலுள்ள பாலம்; திருத்துமாறு மக்கள் கோரிக்கை!



(பாறுக் ஷிஹான்)

ஒடுக்கமான பாலம் புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் ஒரு வழிப்பாதையாக பொது மக்கள் பாவிப்பதுடன் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக ஆயுள்வேத வைத்திய சாலை, உப தபாலகம், பாடசாலை, பள்ளி வாசல்கள் மற்றும் தொழில் நிமித்தமான செல்வோர் அச்சத்துடன் பயணம் செய்கின்றனர்.

அத்துடன் இரவு வேளையில் எவ்வித மின் ஒளியும் இன்றி இருளில் மூழ்கி காணப்படுவதால் மாற்று பாதைகளை பாதசாரிகள் பயன்படுத்துவதை காண முடிகின்றது. இது தவிர உடைந்து விழும் நிலையில் இந்த ஒடுக்கமான பாலம் காணப்படுகிறது என்றும் உடனடியாக மீள உடைத்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் எனவும் சாய்ந்தமருது சாய்ந்த மருது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாலம் குறித்து மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்கள் இந்த பிரச்சினைக்கு தீர்வை தருவதாக கடந்த கால தேர்தல் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை என்று விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகள் பல்வேறு காரணங்களை கூறி வருகின்ற நிலையில் இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க முன்வர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மட்டக்களப்பில் அரிசி விநியோகம்; அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் ஆரம்ப விநியோகம் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் வழிகாட்டுதலின் கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கொக்குவில் விக்னேஸ்வரா வித்தியாலத்தில் நேற்று (21) இடம்பெற்றது.

வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நிகழ்வில் கலந்து கொண்டார்.

600 மில்லியன் நிதி ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரு தடவைகள் அரிசி பொதிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது வருட காலப்பகுதியில் வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக அரிசி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷி ஸ்ரீகாந், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், பிரதி திட்டமிடம் பணிப்பாளர், வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சரின் பிரத்தியோக செயலாளர் ரோஷ்மன் என பலர் கலந்து கொண்டனர்.



# களுதாவளையில் நடைபெற்ற கலாசார விளையாட்டு விழா!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

களுதாவளையில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கலாச்சார விளையாட்டு விழா கெனடி விளையாட்டு கழகத்தின் தலைவர் த.சர்வின் தலைமையில் களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

கெனடி விளையாட்டுக் கழகத்தின் 66 ஆவது ஆண்டை நினைவு கூறும் முகமாக கலாசார விளையாட்டு போட்டிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் போது தேங்காய் உடைத்தல், கம்பு சுற்றுதல், கையிறு இழுத்தல், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தது, தலையனை சமர் என பாரம்பரிய போட்டிகள் இடம் பெற்றன.

இந்த கழகத்தால் இப்பிரதேசத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதே தரத்திலான வீரர்களை உருவாக்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.



விளையாட்டுத்துறையில் அதித திறமைகளை சர்வதே மட்டத்தில் வெளிக்காட்டிய கழக வீரர்களுக்கு நினைவுச்சின்னம் அதிதிகளினால் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம், காணி சீர்திருத்த ஆணைக்குழு பணிப்பாளர் என.விமல்ராஜ், களுதாவளை பிரதேச சபை செயலாளர் எஸ்.அறிவழகன், களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் கோயில் பரிபாலசபை தலைவர் கே.பாஸ்கரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.



4 கோடி ரூபா விவகாரம்:

# விசாரணைக்கு ஆஜராவதற்கு 10 நாள்கள் அவகாசம் கேட்டார் நயினார் நாகேந்திரன்

4 கோடி ரூபா பணம் பறிமுதல் தொடர்பாக பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரன் இன்று பொலிஸ் விசாரணைக்கு ஆஜராகவில்லை. விசாரணைக்கு ஆஜராக 10 நாள்கள் அவகாசம் கேட்டு வழக்கறிஞர் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

தாம்பரம் ரயில் நிலையத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்பு, நயினார் நாகேந்திரனின் ஹோட்டல் ஊழியர்கள் உள்ளிட்ட மூவரிடம் 3.99 கோடி ரூபா பணம் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, நயினார் நாகேந்திரனுக்குச் சொந்தமான ஹோட்டல் உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர்.



விசாரணையில், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள உணவு விடுதியில் இருந்து அதிகபணம் கைமாறியது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உணவு விடுதி இருக்கும் கட்டடம் பா.ஜ.க. தொழில் துறைப் பிரிவு தலைவரான கோவர்த்தனனுக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது. அங்கும் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையிட்டு, 1.10 லட்சம் ரூபாவை கைப்பற்றினர்.

இதுதொடர்பாக விசாரிக்க நயினார் நாகேந்திரனுக்கு தாம்பரம் பொலிஸார் அழைப்பாணை அனுப்பிய நிலையில், நயினார் நாகேந்திரன் இன்று பொலிஸ் விசாரணைக்கு ஆஜராகவில்லை. விசாரணைக்கு ஆஜராக 10 நாள்கள் அவகாசம் கேட்டு வழக்கறிஞர் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில், "தேர்தல் பணி, சொந்த பணி காரணமாகவும் 10 நாள்கள் அவகாசம் வேண்டும். 10 நாள்களுக்கு பிறகு விசாரணைக்கு ஆஜராகிறேன்." என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# மீன்பிடி தடை காலத்தால் மீன்வரத்து குறைந்தது

## காசிமேட்டில் மக்கள் ஏமாற்றம்

ஆழ்கடலில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி வரையிலான கிழக்குக் கடற்கரை பகுதியில் ஆண்டுதோறும் ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் ஜூன் 14 ஆம் திகதி வரை 61 நாள்களுக்கு விசைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. இதன்படி, இந்த ஆண்டுக்கான மீன்பிடித் தடைக்காலம் கடந்த 15 ஆம் திகதியன்று தொடங்கியது.

இதனால், மீனவர்கள் விசைப் படகுகளை கரையில் நிறுத்தி வைத்துள்ளனர். கட்டுமரம், பைபர் படகுகள், வள்ளம் உள்ளிட்ட நாட்டுப் படகுகள் மூலம் மீனவர்கள் அண்மைக் கடல் பகுதியில் சென்று மீன்பிடித்து வருகின்றனர்.

மீன்பிடித் தடைக் காலம் அமலுக்கு வந்த பிறகு முதல்



ஞாயிற்றுக் கிழமையான நேற்று 100 பைபர் படகுகளில் மட்டுமே மீனவர்கள் மீன்பிடித்து வந்தனர். இதனால், குறைந்த அளவு மீன்களே கிடைத்தன. இதனால், காசிமேட்டுக்கு மீன் வாங்க சென்றவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

# தமிழ்நாட்டில் பறவைக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை தேவை

## அன்புமணி கோரிக்கை

பறவைக் காய்ச்சல் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில்,

"கேரளத்தில் பறவைக் காய்ச்சல் வேகமாக பரவி வரும் நிலையில், தமிழ்நாட்டிற்குள்ளும் பறவைக் காய்ச்சல் பரவி விடுமோ என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குள் பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை மேற்கொள்ள வேண்டும்.

கேரளத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குள் வரும் சரக்கு வாகனங்களை சோதனையிட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணி நேற்று முதல் தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், அது பெயரளவில் மட்டும் தான் மேற்கொள்ளப்படுவதாகவும், பெரும்பான்மையான வாகனங்கள் மீது கிருமிநாசினி



தெளிக்கப் படுவதில்லை என்றும், அதற்குத் தேவையான மனிதவளம் இல்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அதேபோல், கோவை, தேனி மாவட்டங்களையொட்டிய எல்லைப் பகுதிகளில் இத்தகைய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஆய்வு செய்து குறைகள் அனைத்தும் களையப்பட வேண்டும்.

பறவைக் காய்ச்சல் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



# மாலைதீவு நாடாளுமன்ற தேர்தலில் முகமது மொய்ஸுவின் கட்சிக்கு வெற்றி

மாலைதீவில் இடம்பெற்ற நாடாளுமன்றத்தின் 93 இடங்களுக்கான தேர்தலில் ஜனாதிபதி முகமது மொய்ஸுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி இறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்று இடம்பெற்ற மாலைதீவு நாடாளுமன்றத் தேர்தலில் உள்ளூர் நேரப்படி மாலை 5 மணி வரையில் 72.96 சதவீத வாக்குகள் பதிவானதாக அந்த நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

நாட்டில் உள்ள 34 விடுதிகள், சிறைகள், பிற தீவுகளில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்து, அதேபோல் இந்தியாவின் திருவனந்தபுரம், இலங்கையின் கொழும்பு, மலேசியாவின் கோலாலம்பூர் போன்ற வெளிநாடுகளில் உள்ள நகரங்களிலும் என மொத்தம் 602 வாக்குப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன என கூறப்படுகிறது.

மேலும், இந்தத் தேர்தலில் ஜனாதிபதி முகமது மொய்ஸுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் (பி.என்.சி), மற்றும் எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி (எம்.டி.பி) உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 368 வேட்பாளர்கள் போட்டி யிட்டுள்ளனர்.

இந்த நிலையில் மாலைதீவின் தாஜுதீன் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் ஜனாதிபதி மொய்ஸு தனது வாக்கைப் பதிவு செய்தார், அதேபோல் முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலி, மாலியில் உள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

பின்னர் தேர்தல்கள் முடிவுற்றது, மாலை வேளையில் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகி முடிவுகள் வெளிவரத் தொடங்கின. அதன்படி, ஜனாதிபதி முய்சுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி 67 இடங்களில் வெற்றி பெற்று இறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது.

அதற்கு அடுத்தபடியாக மாலைதீவு ஜனநாயகக் கட்சி 12 இடங்களில் வென்றுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு சீன ஆதரவு நிலைப்பாட்டை கொண்டுள்ளார், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை வகிக்கும் நிலையில், மொய்ஸுவின் அமைச்சரவையில் 3 நியமன அமைச்சர்களை நியமிப்பது அண்மையில் தடைப்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி மொய்ஸுவிற்கு எதிரான ஊழல் ஆய்வு அறிக்கை அண்மையில் வெளியாகிய நிலையில், இது தொடர்பாக விசாரணை நடத்துமாறும், ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யுமாறும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இருப்பினும், இந்தக் குற்றச்சாட்டை ஜனாதிபதி மொய்ஸு மறுத்துள்ளார்.

இந்தச் சூழலில் நடைபெற்றுள்ள நாடாளுமன்றத் தேர்தல் அதிபர் மொய்ஸுவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்த நிலையில், இறுதிப் பெரும் பான்மை வாக்குகளை அவரது மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அரிசி இறக்குமதிக்கு மீண்டும் தடை: பாகிஸ்தானை எச்சரிக்கும் ரஷ்யா

ரஷ்யாவினால் முன்வைக்கப்படும் சர்வதேச தரத்தை சரக்குகளில் கவனிக்கப்படவிட்டால் அரிச இறக்குமதியை மீண்டும் தடை செய்ய போவதாக ரஷ்யா பாகிஸ்தானை எச்சரித்துள்ளது.

ரஷ்யாவின் FSVPS என்ற அமைப்பு இந்த எச்சரிக்கையை பாகிஸ்தானுக்கு விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் சர்வதேச மற்றும் ரஷ்ய தாவரவியல் விதிகள் மீறப்பட்டுள்ளதை கண்டறிந்த நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ரஷ்யாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் வர்த்தகப் பிரதிநிதி இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக் குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, இவ்வாறான விதி மீறல்களை தடுத்து நிறுத்துமாறு பாகிஸ்தான் தூதரகத்துக்கு ரஷ்ய அதிகாரிகள் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து அரிசி இறக்குமதிக்கு ரஷ்யா தடை விதித்ததுடன் 2006 டிசம்பரில், உணவுப் பாதுகாப்புத் தரத்தை பூர்த்தி செய்யாததால் பாகிஸ்தானில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதை ரஷ்யா நிறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒவ்வொரு 10 நிமிடத்துக்கும் ஒரு குழந்தை உயிரிழப்பு

## இஸ்ரேல் போரில் துயரம்

காசாவில் மோதலின் தாக்கம் காரணமாக ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

நாளாந்தம் பல்வேறு காயங்கள் மற்றும் சுகாதார பிரச்சினைகளால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் புறக்கணித்து, காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தும் தாக்குதல்களால் குழந்தைகளின் வாழ்க்கை மிகவும் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளதாக அவர்கள் ஓர் அறிக்கையில் காட்டியுள்ளனர்.



பலஸ்தீன சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, போரினால் 34,049 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 76,901 பேர் காயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், பலஸ்தீனத்தில் மேற்குக் கரையில் உள்ள நூர் ஷம்ஸ் அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடா முரசு

திங்கட்கிழமை 22/04/2024

## ஒன்ராரியோவில் மழையும் வெயிலும்

ஒன்ராரியோ,ஏப்ரல் 22
இந்த வாரமும் ஒன்ராரியோவின் வானிலை கலந்த நிலையில் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. பிராந்தியத்தின் ஊடாக C2





# உலகப் புவி தின நிழ்ச்சிகளில் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி

ஒன்ராரியோ, ஏப்ரல் 22
உலக புவி தினத்தை முன்னிட்டு, ஸ்கார்பரோ நகரில் இடம்பெற்ற சுற்றுச்சூழல் சுத்தம் செய்யும் நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினரும், பூர்வீகக் குடிகள் நலன் பேண் அமைச்சருமான கெரி ஆனந்த சங்கரி கலந்துகொண்டார். C2



# அல்பேர்ட்டாவில் பெரும் காட்டுத்தீ!

## சில இடங்களில் மக்கள் வெளியேற்றம்

அல்பேர்ட்டா, ஏப்ரல் 22
நீடித்த மற்றும் தீவிர வறட்சியின் காரணமாக பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அல்பேர்ட்டா மாகாணங்களில் காட்டுத்தீ பெருமளவில் பரவி வருகின்றது.

கட்டுக்கடங்காமல் போயுள்ள சில காட்டுத்தீக்களை தணிப்பதற்கு பிரிட்டிஷ் கொலம்பியாவின் தீயணைப்புப் படையினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

அல்பேர்ட்டாவின் வடபகுதியில் சில இடங்களில் மக்களை அவசரமாக வெளியேறுமாறு தீயணைப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, அல்பேர்ட்டாவில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான போதிய நீரில்லாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத்தீயை அணைப்பதற்கு பயன்படுத்தப்படும் அல்பேர்ட்டாவின் ஆறுகள் இன்னும் உறைந்திருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.




# எயார் பஸ் தயாரிப்பு ஆலையின் ஊழியர்கள் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை நிராகரித்தனர்

கியூபெக், ஏப்ரல் 22

கியூபெக் மாகாணத்தின் எயார் பஸ் தயாரிப்பு ஆலையின் ஊழியர்கள் மூன்றாவது முறையாக நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளனர்.

சுமார் 1,300 உறுப்பினர்களைக் கொண்ட இந்த தொழிற்சங்கத்தின் 70 சதவீதமான உறுப்பினர்கள் தற்போது நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு எதிராக வாக்களித்துள்ளனர் எனத் தொழிற்சங்கம் ஊடகத்திற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்துடனான இந்த உடன்படிக்கை ஊழியர்களின் ஆதரவைப் பெறும் எனத் தாம் எதிர்பார்த்த நிலையில் தொழிற்சங்க உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களித்துள்ளனர் எனத் தொழிற்சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நிறுவனத்துடன் விரைவில் கலந்துரையாடி, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரண்டு பெண்களைத் தாக்கினாராம் பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை




ஒன்ராரியோ, ஏப்ரல் 22

தாக்குதல் சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு பெண்களை தாக்கிய குற்றச்சாட்டில் 25 வருடங்கள் பொலிஸ் சேவையில் அனுபவம் கொண்டிருந்த இந்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


இதன் காரணமாக அந்தப் பொலிஸ் அதிகாரிக்கு சம்பளத்துடன் கூடிய தற்காலிகபணிநீக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## ஒன்ராரியோவில்...

காற்றின் நிலையில் பெரும் மாற்றங்கள் நிகழ்கின்ற நிலையில், வாரத்தின் ஆரம்பப் பகுதியில் மழை கலந்த கால நிலை நீடித்து, வாரத்தின் இறுதியில் வெப்பநிலை அதிகரிக்கவுள்ளது.

இதேவேளை, ஒன்ராரியோவின் டிம்மிஸ் பகுதியில் ஏப்ரல் 26ஆம் திகதி வெப்பநிலையானது மறை 14.5 பாகை செல்சியஸாக பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இது கனடிய வரலாற்றில் ஏப்ரல் இறுதிப் பகுதியில் பதிவாகும் குளிர்ந்த காலநிலையாக பதிவு செய்யப்படும்.



## உலகப் புவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹைறலேண்ட் கிரீக் சமூக அமைப்பு, சென்டேனியல் கொம்யுனிட்டி என்ட் ரீகிரியேஷன் அமைப்பு, மற்றும் ஸ்கார்பரோ நகர நகர சபை உறுப்பினர் ஜெனிபர் மெக்கல்வி ஆகியோரினால் மூன்று வெவ்வெறு இடங்களில் இந்த சுற்றுச்சூழல் சுத்தம் செய்யும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் குறித்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும், தன்னார்வ இளைஞர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு மக்கள் மற்றும் தன்னார்வ இளைஞர்களுடன் இணைந்து அமைச்சர் கெரி ஆனந்தசங்கரியும் சுற்றுச்சூழல் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

அத்துடன், இந்த சுற்றுச்சூழல் ஒழுங்கமைப்பு நிகழ்வினை ஒழுங்கு செய்தமைக்காக இந்த அமைப்புக்களுக்கும், நகர சபை உறுப்பினர் ஜெனிபர் மெக்கல்விக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.




# ஊழியர்களுக்கான திறன்கள் மீள்பயிற்சி நிகழ்ச்சிக்காக 50 மில்லியன்கள் டொலர்

ஒன்ராரியோ, ஏப்ரல் 22

ஊழியர்களுக்கான திறன்கள் மீள்பயிற்சி நிகழ்ச்சிக்காக 50 மில்லியன்களை கனடிய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 16) கனடிய மத்திய அரசாங்கம் முன் வைத்த வரவு செலவுத் திட்டத்தில், தொழிநுட்ப உள்வாங்கல் மற்றும் கனடாவில் செயற்கை நுண்ணறிவுத் துறைக்காக 2.3 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

செயற்கை நுண்ணறிவினால் தொழில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு உதவி செய்வதற்கு அடுத்த நான்கு வருடங்களுக்காக 50 மில்லியன் டொலர்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.



# இளைஞர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பட்டம், தொழில் பெறுவது சிக்கலில்!

## கியூபெக் ஆய்வில் தகவல்

கியூபெக்,ஏப்ரல் 22

இளைஞர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலன் பெற்றுவரும் இளைஞர்கள் பட்டம் பெறவோ, தொழில்பெறவோ முடியாது போகும் என கியூபெக்கில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

அரச பராமரிப்பின் கீழ் உள்ள 37 சதவீமான இளைஞகள் 21 வயதை அடையும் போது பட்டம் பெறுகின்றனர் எனவும், அதேவேளை, கியூபெக் முழுமைக்கும் இந்த அளவு 86 சதவீதம் எனவும் கியூபெக்கின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச பராமரிப்பில் உள்ள மூன்றில் ஒரு பங்கினர் வேலை இன்றி இருக்கின்றனர் எனவும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் பராமரிப்பில் இருந்து வெளியேறும் சுமார் 2,000 இளைஞர்களுக்கு வேலைக்கான தேவையிருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பராமரிப்பு நிலையங்களின் தங்குமிடங்கள் மாறுதல் போன்ற நிலையற்றச் சூழலானது பராமரிப்பில் உள்ள இளைஞர்கள் கல்வியை நிறைவு செய்வதற்கும், வேலை தேடுவதற்கும் தடையாக இருக்கின்றன என அறிக்கை தெரிவிக்கின்றது. 2023ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி வரை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வில், 16 மற்றும் 24 வயதுக்கு உட்பட்ட 1,136 பேர் கலந்துகொண்டுள்ளனர்.



# கனடாவில் கப்பல் விபத்தில் இரண்டு இளைஞர்கள் மரணம்

## நான்கு பேர் காப்பாற்றப்பட்டனர்

கனடாவில் கப்பல் விபத்தில் சிக்கி இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். கனடாவின் நியூபவுண்ட்லாண்ட் பகுதி கடலில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மீன்பிடிக் கப்பல் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. கப்பலில் பயணம் செய்த மேலும் நான்கு பேர் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். நீரில் மூழ்கியவர்கள் மீட்கப்பட்டு, விமானம் மூலம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு இளைஞர்கள் விபத்தில் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 22

மிசிசாகா பகுதியில் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகி, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிவிந்தால் தெரிவிக்குமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

காயமடைந்தவருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் காயங்கள் எதுவும் இல்லை என பீல் பிராந்திய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கனடாவுக்கு விசிட்டர் விசாவில் வரும் தமிழர்களின் எண்ணிக்கை குறைகிறது

கனடாவுக்கு விசிட்டர் விசாவில் வருகை தரும் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் முதல் இந்த வருடத்தின் முதற்பகுதி வரையில் பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் கனடாவுக்கு விசிட்டர் விசாவில் வருகை தந்துள்ளனர்.

எனினும் அண்மைக்கால தரவுகளின்படி விசிட்டர் விசாவில் வருகை தருவோரின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் விசிட்டர் விசா தொடர்பில் எந்த வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் அந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனாலும் ஏற்கனவே கனடா வந்தவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் புதிதாக வருவதற்கு தமிழர்கள் அச்சப்படுகின்றனர்.




கனடாவில் வேலைவாய்ப்பின்மை, வாடகை வீடுகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை போன்றவை இதில் முக்கியமாகும். பல கோடி ரூபாக்களை செலவு செய்து கனடா வந்த தமிழர்கள் இங்கு வாழ முடியாத என்பதை உணர்ந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர்.

தமிழர்கள் மட்டுமன்றி பெருமளவு சிங்களவர்களும் கனடாவுக்கு விசிட்டர் விசாவில் படையெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேம்பிரிட்ஜ் அணு உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு 80 மில்லியன் டொலர்

ஒன்ராரியோ, ஏப்ரல் 22

ஒன்ராரியோ மாகாணத்தின் கேம்பிரிட்ஜ் அணு உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு பி.டபிள்யு.எக்ஸ் டொக்னோலஜி நிறுவனமானது மாகாண அரசாங்கத்திற்கு 80 மில்லியன் டொலர்களை வழங்குகின்றது.

இந்த புதிய முதலீடானது, 250 புதிய திறன்களுக்கான தொழில்களை உருவாக்கவுள்ளதுடன், ஒன்ராரியோ அரசாங்கத்தின் தங்கியிருக்கக் கூடிய, பெற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் சுத்தமான அணு சக்தி உற்பத்தியின் விரிவாக்கத்திற்கும் உதவவுள்ளது.

இந்த முதலீடு தொடர்பில் பி.டபிள்யு.எக்ஸ் டொக்னோலஜி நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துள்ள மாகாண சக்தி வளங்கள் அமைச்சர் டொட் ஸ்மித், சிறிய மொடியுலர் ரீஎக்டர் கொண்ட அணு உலையை வைத்திருக்கும் ஜி7 நாடுகளில் முதலாவது நாடு என்ற பெருமையை இந்த முதலீடு கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மிகப்பாரிய அணு சக்தி செயல்திட்டங்களில் உலகெங்கிலும் முன்னெடுக்கப்படும் முதலீட்டின் ஒரு அங்கமாக இந்த முதலீடு இருப்பதாக பி.டபிள்யு.எக்ஸ் டொக்னோலஜி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் கல்வியாளர்களுக்கு பயிற்சி அளிக்க கனடா இணக்கம்



இலங்கையின் கல்வியாளர்களுக்கு பயிற்சி அளிக்க கனடா விருப்பம் கொண்டுள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவிற்கும் கனடாவின் வான்கூவரிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இலங்கையில் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு தகவல் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பங்களிப்பைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இதன் கீழ், இலங்கையில் உள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளின் கல்வியாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிபர்கள், இலங்கை கல்விப் பல்கலைக்கழகத்தின் கல்வி நிர்வாகிகள் மற்றும் ஆசிரிய உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பதற்கு கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஆதரவைப் பெறுவதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இலங்கை மற்றும் கனடாவின் கல்லூரிகளை இணைத்து நிறுவுவது குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பதில் தலைவர் பேராசிரியர் கேஜ் அவெரில், சர்வதேச மற்றும் ஆளுநர்கள் சபையின் உறுப்பினர் பேராசிரியர் அன்னா கிண்ட்லர் மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் கலாநிதி ஃபாங் வாங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பிறம்டன் விபத்தில் இருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 22

பிறம்டன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று ஏப்ரல் 21ஆம் திகதி மாலை பிறம்டன் பகுதியில் இரு வாகனங்கள் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 5:30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றதாக பீல் பிராந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு வாகனத்தைச் செலுத்தி வந்தவர்ஒரு சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் எனவும், மற்றைய வாகனத்தைச் செலுத்தி வந்தவர் கடும் காயங்களுடன் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

